
ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு

# பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதி என்றால் என்ன ?



# பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதி என்றால் என்ன?

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு
ரோம், 2001

இவ்வெளியீட்டில் பயன்படுத்தப்பட்ட பெயர்க்குறிப்புகளும், அளிக்கப்பட்ட தகவல்களும் எந்த ஒரு நாட்டின் சட்ட முறையான தகுதிநிலை பெருநிலப்பகுதி, நகரம் அல்லது அதன் அதிகாரத்திற்குட்பட்ட பகுதி பற்றியோ அல்லது கட்டுப்பாட்டு எல்லைக்கோடு அல்லது எல்லை பற்றியோ, ஐக்கியநாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் சார்பாக குறிப்பாக எதுவும் சுட்டிக்காட்டப்படவில்லை.

ISBN 92-5-104541-0

அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தார்க்கே, இவ்வெளியீட்டின் தகவல்களை, கல்வி சம்பந்தமாகவோ (அல்லது) பிற வியாபார நோக்கமில்லாத காரியமாகவோ இருப்பின் பதிப்பு உரிமையாளரின் எழுத்து மூலமான முன் அனுமதியின்றி இச்செய்தி தொகுப்பிலிருந்து எடுத்தாளப்பட்ட மூல வெளியீட்டை குறிப்பிட்டு வெளியீடு செய்ய அனுமதிக்கப்படுகிறது. மறுவிற்பனை அல்லது வியாபார நோக்குடன் கூடிய காரியங்களுக்கு பதிப்பகத்தாரின் எழுத்து மூலமான அனுமதியின்றி மறுதயாரிப்பு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. இதற்கான அனுமதிக்கு " முதன்மையாளர், வெளியீடு மற்றும் பல்வகை சேவை, தகவல் பிரிவு, ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு, வியாலே டெல்லே டெர்மே டி காரகல்லா 00100, ரோம், இத்தாலி (அல்லது) இ மெயில் fao . org க்கு விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். "

**© FAO 2001**

# பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதி என்றால் என்ன?

மீன்வளம் (மேலாண்மை, மீன்பிடிப்பு, பதப்படுத்துதல், மீன்விற்பனை ஆகியவை அடங்கும் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு (பண்ணைகள் மூலம் மீன்வளர்ப்பு) உலகம் முழுவதும் உள்ள மக்களுக்கு உணவு, வேலைவாய்ப்பு, வருவாய் மற்றும் பொழுதுபோக்கு ஆகியவைகளை வழங்கும் முக்கிய ஆதாரமாகும். கோடிக்கணக்கான மக்கள் தங்களின் வாழ்க்கைத் தேவைகளுக்கு மீன்வளத்தைச் சார்ந்திருக்கின்றனர். வருங்காலச் சந்ததிக்கும், போதுமான அளவு மீன்வளம் இருக்க வேண்டுமென்றால், மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும், உலக மீன்வளத்தை பாதுகாப்பதற்கும் மேலாண்மை செய்வதற்கும் உதவ வேண்டும்.

இதனை கருத்தில் கொண்டு, ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பைச் சார்ந்த 170–உறுப்பு நாடுகளுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் " பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதியினை 1995ம் ஆண்டு முதல் ஏற்று செயல்படுத்தி வருகின்றன. உள்நாடு, கடல்பகுதி என்று எப்பகுதியில் வாழ்ந்தாலும் மீன்வளர்பிலும், நீர்வாழ் உயிரின வளர்ப்பிலும் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் இவ்விதிகளை யாருடைய வற்புறுத்தலும் இன்றி தாமாக முன் வந்து கடைபிடிக்க வேண்டும். இவ்விதிகள் விருப்புடன் கடைப்பிடிக்கப்பட வேண்டியவையாதலால் மீன்வளத்திலும், நீர்வாழ் உயிரின வளர்ப்பிலும் ஈடுபட்டு வரும் அனைத்து தரப்பினரும் தாமாகவே முன்வந்து, அதன் அடிப்படை கொள்கைளுடனும், நோக்கங்களுடனும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டு இவற்றை செயல்படுத்த வேண்டும்.

பொறுப்பார்ந்த நடத்தை விதிகள் என்பது 2 ஆண்டுகால சேகரிப்பின் மூலம் பெற்ற அடிப்படை கொள்கைகள், நோக்கங்கள் ஆகியவற்றின் தொகுப்புகளாகும். இந்த விதிகள், உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் பிரதிநிதிகள், அரசுத்துறை நிறுவனங்கள், மீன்பிடி நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் நீண்ட மற்றும் கடுமையான உழைப்பின் மூலம் ஏற்பட்ட ஒப்பந்தமாகும். அதாவது மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பில் ஈடுபட்டுள்ள பல்வேறு குழுக்களின் கூட்டு முயற்சிகளின் முடிவாகும். இதன் காரணமாக இவ்விதிகள் விரிவாக மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பில் உலகளாவிய உடன்பாடு அல்லது ஒப்பந்தத்தை பிரதிபலிக்கின்றன.

அரசு, மீனவ சமுதாய மக்கள் மற்றும் அதைச்சார்ந்த தொழில்கள் ஆகியவையுடன் உடன்பட்டு இருப்பதால், இவ்விதிகளை அமுல்படுத்த வேண்டிய பொறுப்பில் உள்ளது. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு இவ்வித நடவடிக்கைகளுக்கு தொழில் நுட்ப ரீதியாக உதவும். ஆனால், இவற்றை நடைமுறை படுத்துவதற்கான நேரிடையான பொறுப்பு இதற்கு கிடையாது. ஏனெனில் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பிற்கு தேசீய மீன்வள கொள்கைகள் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பு கிடையாது. இது அரசுகளின் முழு பொறுப்பாகும். அரசு அதன் அடிப்படை கொள்கைகளையும், இலக்குகளையும், தேசீய மீன்வள கொள்கைகள் மற்றும் சட்டத்துடன் ஒருங்கிணைத்தால்தான், விதிகளை, அதிக பயனளிக்கக்கூடிய வகையில் நிறைவேற்ற முடியும். இக்கொள்கைகளுக்கும், சட்ட திருத்தங்களுக்கும் உதவிட உத்திரவாதம் அளிக்கும் வகையில், அரசுகள், தொழில்துறை மற்றும் இதர குழுக்களை அவைகளின் ஒத்துழைப்பையும், தன்னார்வத்துடன் ஈடுபடுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் அரசு, மீனவ சமுதாய மக்கள் மற்றும் தொழில் துறையையும் உற்சாகப்படுத்தி, விதிகளை விரிவுபடுத்துவதை நல்ல பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். அதுவும் அவ் இலக்குகளையும், பொறுப்பார்ந்த நடத்தை விதிகளையும் தொடர்ந்து, ஆதரவு அளிப்பதாக இருக்க வேண்டும். அந்த விதிகளின் நல்ல நடைமுறைகளே, விதிகளை செயல்படுத்துவதற்கான மற்றொரு வழியாகும்.

இந்த கையேட்டின் நோக்கம் தொழில்நுட்ப ரீதியாக இல்லாவிட்டாலும், பொறுப்பார்ந்த நடத்தை விதிகளின் சில முக்கிய நிலைகளை விவரிப்பதாகும். இத்தகவல்கள் மக்களை இலக்குகள் மற்றும் விதிகளின் பயன்களை அறிய அதிக விழிப்புள்ளவர்களாக்கும் என நம்பிக்கை அளிக்கிறது. மேலும் அவர்கள் இயல்பாக சிறுபான்மை அல்லது பெரும்பான்மை மீன்பிடிப்பாளராக இருப்பினும் அவர்களை எல்லாவகை மீன்பிடிப்பிலும், நீர்வாழ் உயிரின வளர்ப்பிலும் உற்சாகத்துடன் ஈடுபடுத்தும். இந்த கையேடு பொறுப்பார்ந்த நடத்தை விதிகளை அப்படியே பிரதிபலிக்கவில்லை. ஆனால் அதில் இருக்கக் கூடிய அதிக தகவல்களை மிக எளிமையாக அளிக்க முயற்சிக்கிறது.

இந்த விதிகள் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பால், அதனுடைய ஐந்து அதிகார பூர்வ அலுவலக மொழிகளாகிய அரபு, சீனம், ஆங்கிலம், பிரெஞ்ச் மற்றும் ஸ்பானிஷ் மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மேலும் அரசுகள், தொழில் துறைகள் மற்றும் இதர நிறுவனங்கள், தாமாமே இதர மொழிகளான அல்பேனியா, குரோசியா, எஸ்தோனியா, பார்சி, ஜெர்மன், ஐஸ்லாந்து, இந்தோனேஷியா, இத்தாலி, ஜப்பான், போலந்து, ரஷ்யா, சிங்களம், ஸ்லேவேனியா, தமிழ், தாய்லாந்து மற்றும் டைகிரினா மொழிகளில் மொழி

பெயர்ப்பு செய்துள்ளன. இவற்றில் சில மொழி புத்தகங்கள் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் மீன்வளத் துறை இணைய வலைதளத்தில் காணலாம்.

பொறுப்பார்ந்த நடத்தை விதிகளைப்பற்றி மேலும் விபரங்கள் அறிய விரும்புகிற மக்கள், இப்புத்தகத்தின் நகல் பெறவும், உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் மீன்வளத்துறை இணைய வலைதளத்தினை தொடர்பு கொள்ளலாம்.


வலைதள முகவரி பின்வருமாறு

http: // www. fao.org/fi/agreem/code cond /codecon/asp

இணைய வலை தளம் மூலம் வழிகிடைக்க இயலாதெனில் இந்நூலின் ஒரு நகல் பெற கீழ்க்கண்ட முகவரியினை தொடர்பு கொள்ளவும்.

முதன்மை சேவையாளர், மீன்வளத்துறை, உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு வியாலே, டெல்லே டெர்மே டி காரகல்லா 00100 ரோம், இத்தாலி

தயை கூர்ந்து நீங்கள் விரும்பும் இந்நூல் அரபி, சீனம், ஆங்கிலம், பிரெஞ்ச் அல்லது ஸ்பானிஷ் ஆகியவற்றுள் எம்மொழியில் என்பதை உறுதி செய்து குறிப்பிடவும்.



பின்னனி விவரம்

வருங்கால சந்ததிக்கும், வேண்டிய அளவு நிறைவாக மீன்கள் கிடைப்பதை உறுதி அளிக்கும் வகையில், இந்த பொறுப்பார்ந்த நடத்தை விதிகள், மீன்பிடிப்பிலும், நீர்வாழ் உயிரின வளர்ப்பிலும் ஈடுபட்டுள்ள எல்லா நாடுகளும் ஒன்றுபட்டு மீன்வளங்களையும், அவற்றின் உறைவிடங்களையும் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை செய்திட பணியாற்ற வேண்டும் என வலியுறுத்துகிறது. மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள மக்கள் அனைவரும், மீன்கள்

இருப்பினை, பாதுகாக்கவும் அல்லது போதுமானஅளவில் தற்போதும், வருங்காலத்திற்கும் கிடைக்க கூடிய நிலையில் உற்பத்தியாகும் அளவுக்கு பராமரிக்கவும் கடுமையாக உழைக்க வேண்டும். இந்த அளவிலான மீன்பிடிப்பு, அதிக அளவில் அழியாமல் காக்கும் உற்பத்தி என்று அழைக்கப்பட வேண்டும். அதாவது ஒரு நாட்டின் மீன்பிடிப்புகளும், கொள்கைளும் நீண்ட காலம் அழியாமல் மீன்வளங்கள் காத்திடும் வகையில் வடிவமைக்கப்பட வேண்டும். அதன் மூலமாக அவ்வளங்கள் பாதுகாக்கப்பட்டு, தொடர்ந்து மீன்உணவு கிடைப்பதற்கும், மீனவ சமுதாய மக்களின் ஏழ்மை நிலையினை போக்கிடவும் உறுதிபடுத்தப்படும்.


ஆகையால் பொறுப்பார்ந்த நடத்தை விதிகளின் உண்மையான நோக்கம் நாடுகளுக்கும் மற்றும் கூட்டு நாடுகளுக்கும் மீன்பிடிப்பிலும், நீர்வாழ் உயிரின வளர்ப்பிலும் அபிவிருத்தி அல்லது முன்னேற்றம் காணவும், இலக்கினை முறையான வழியில் அடையவும் உதவுவதாகும்.

நல்ல மீன்பிடி கொள்கைகளின் மேம்பாட்டுக்கு நிதி, திறமை மற்றம் அனுபவம் தேவை என்பது நன்கறிந்த ஒன்றாகும். இவைகள் எப்பொழுதும் வளர்ச்சி அடையும் நாடுகள் மேலும் குறிப்பாக குறைந்த அளவிலேயே வளர்ச்சி அடைந்த நாடுகள் மற்றும் சிறுதீவு நாடுகளிடம் இருக்கும் என எதிர்பார்க்க இயலாது. இந்த விதிகள் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு போன்ற பன்னாட்டு நிறுவனங்களை ஊக்கப்படுத்தி, அந்த நாடுகளை தேசீய தகுதிகளை வளர்ச்சி அடையச் செய்ய உதவுவதன் மூலம் மீன்பிடிப்பிலும், நீர்வாழ் உயிரின வளர்ப்பிலும் அபிவிருத்தி மற்றும் மேலாண்மை செய்யும் தகுதியினை வளர்த்துக் கொள்ள உதவும்.

இந்த விதிகள் எவ்வாறு மீன்வளத்தினை பொறுப்புடன் மேலாண்மை செய்திட வேண்டுமெனவும், மீன்பிடிப்பு நடவடிக்கைகள் தமக்குள் எப்படி நடத்திட வேண்டும் என்றும் விவரிக்கின்றது. இது, மேலும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி, இதர கடலோர மண்டல நடவடிக்கைகளுடன் மீன் பிடிப்புக்கு உள்ள தொடர்புகள் மற்றும் மீன் பதப்படுத்துதல், விற்பனை போன்றவற்றிற்கு வழிவகுக்கிறது. நாடுகள் ஒன்றுகொன்று மீன்பிடிப்பு சம்பந்தப்பட்ட எல்லா நிலைகளிலும் இணக்கமாக இருக்க வேண்டும் என்னும் முக்கியத்துவத்தை இந்த விதிகள் பிரதிபலிக்கின்றது.

ஆனால் இவ்விதிமுறைகளின் மூலம் மீனவர்கள் மீன்பிடி தொழில்துறை மற்றும் அரசுகள் இவ்விதிகளை செயல்படுத்திட சரியாக என்னென்ன நடைமுறைகளை கையாளவேண்டுமென விளக்கப்படவில்லை. இதன் காரணமாக உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு., விதிகளை

அமுல்படுத்திட உதவுவதற்கு விரிவான வழிமுறைகளை பல்வேறு தலைப்புகளில் தயாரித்து வருகிறது. இந்த வழிமுறைகளின் நோக்கம் அனுபவ ரீதியான மற்றும் தொழில் நுட்ப ரீதியான ஆலோசனைகளை, மீனவர்கள் தொழில்துறை மற்றும் மீன்வள மேலாளர்களுக்கு வழங்குவதாகும். இதன் மூலமாக நடத்தை விதிதொகுப்பு ஏற்படுத்தப்பட்டதன் நோக்கம் அமல்படுத்தப்படுவது உறுதி செய்யப்படும்.



## மீன்வள மேலாண்மை

மீன்வளத்தினை மேலாண்மை செய்தலில் நாடுகள் தெளிவான மற்றும் நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட விதிமுறைகளை அறிந்திருந்தல் அவசியம் என இவ்விதிதொகுப்பு அறிவுறுத்துகிறது. மீன்பிடிப்பு தொழில்துறை மீனவ தொழிலாளர்கள், சுற்றுச்சூழல் குழுக்கள் மற்றும் ஆர்வமுள்ள இதர நிறுவனங்களை உள்ளடக்கிய மீன்வளத்தில் ஆர்வம் உள்ள எல்லா குழுக்களின் ஒத்துழைப்புடன் இந்த விதிதொகுப்பு மேம்படுத்தப்பட வேண்டும். மீன்வளங்கள் நாடுகளுக்கிடையே பகிர்ந்து கொள்ளப்படுவதால், மீன்வளம் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை செய்தலில் நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பு அவசியம் என இவ்விதிமுறை அறிவுறுத்துகிறது. இவ்விதி தொகுப்பு, புதிய மண்டல மீன்வள நிறுவனங்கள் நிறுவுவதற்கும், அல்லது ஏற்கனவே உள்ள நிறுவனங்களை வலிமையாக்கவும் வலியுறத்துகிறது. கூட்டுறவு ஒன்றே நீண்டகால இலக்குகளை சாதிக்கும் உண்மையான வழிமுறை என்பதனை இக்கையேட்டின் முற்பகுதியில் விவாதிக்கப்–பட்டுள்ளது. மண்டல மீன்வள நிறுவனங்களின் பங்கினை மேலும் பரிசீலனை செய்து, மண்டல மற்றும் சர்வதேச கூட்டுறவினை இப்பிரிவு விவரிக்கிறது.

எல்லா நிலையிலுள்ள மீன்வளத் தொழிலகங்களும், தெளிவான மீன்வள மேலாண்மை மற்றும் சட்ட வரைமுறைகளுக்குட்பட்டு செயலாக்கம் செய்வது மிக முக்கியமானதாகும். ஏனெனில் மீன்பிடிப்பில் ஈடுபடும்

ஒவ்வொருவரும் நடைமுறையில் பின்பற்றப்படவேண்டிய விதிகளை நன்கு புரிந்து கொள்ளவேண்டும்.

மீன்பிடிப்பு மற்றும் மீன்பதனிடுதல் போன்றவை மேலாண்மையின் மூலம் செயல்படுத்துதல் வேண்டும். மேலும் பிடிக்கப்பட்ட மீன்களின் தரத்தினை பாதுகாக்க எதிர்மறை விளைவுகளை குறைத்து, கழிவுகளை குறைத்து, சுற்றுப்புற சூழ்நிலை பாதிக்கா வண்ணம் செயல்பட வேண்டும். மீன்பிடிப்போர், மீன்பிடிப்பு செய்ததற்கான பதிவேடுகளை பராமரித்தல் வேண்டும். அரசு, நடைமுறைப்படுத்தக்கூடிய சட்டங்களை ஏற்படுத்தி, அவைகளை மீறுபவர்களை தண்டிப்பதற்கு உரிய வழிமுறைகளையும் வகுக்க வேண்டும். விதிமுறைகளை மீறுபவர்களை தண்டிக்க அபராதம் உட்பட அல்லது மீறல்கள் கடுமையாக இருக்கும் பட்சத்தில், மீன்பிடி உரிமங்ளை கூட ரத்து செய்யலாம்.

மீன்வள கொள்கைகளை உருவாக்கும்போது, அனேக விஷயங்களை கருத்தில் கொள்வது இன்றியமையாதது. அவைகளில் மற்றெல்லாவற்றுடனும் மீன்பிடிப்பினால் ஏற்படும் செலவினம் மற்றும் பயன்கள், சுற்றுப்புற சூழல் மற்றும் சமூக விளைவுகள் ஆகியவைகளும் அடங்கியுள்ளன.

நாடுகள், இக்கொள்கைகளை, வகிக்கும் போது பாரம்பரிய மீன்பிடிப்பு எங்கு அவசியம் என கருதப்படுகிறதோ அந்நிலையில் தங்களிடையே உள்ள சிறந்த அறிவியல் தகவல்களை பயன்படுத்திடல் வேண்டும். போதுமான அறிவியல் தகவல்கள் இல்லாதபோது, மீன்பிடி எல்லைகளை வகிப்பதில் நாடுகள் மிகுந்த எச்சரிக்கையினை கையாளுதல் வேண்டும்.

மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள அனைத்து மக்களும் மற்றும் நிறுவனங்களும், மீன்பிடிப்பு மீதான விஷயங்களில் தங்கள் கருத்துக்கள் மற்றும் அபிப்ராயங்களை பகிர்ந்துக் கொள்ள ஊக்கப்படுத்தப்பட வேண்டும். மீன்பிடிப்பையே நம்பி வாழும் மீனவர்களுக்கு உரிய தேவைகளை பூர்த்தி செய்ய பிரத்தியேக கவனம் செலுத்தப்பட வேண்டும். மீன்பிடிப்போர் மற்றும் மீன்வளர்ப்போர்களை கல்வி மற்றும் பயிற்சி அளிக்க நாடுகள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நிலையான மீன்வளம் தற்போதும் மற்றும் எதிர்காலத்திலும் இருக்க உறுதிப்படுத்தும் கொள்கைகளை செயல்படத்தவும் மற்றும் அபிவிருத்தி செய்யவும் தங்களை ஈடுபடுத்திடவியலும்.

மீன்வள ஆதாரங்களை பாதுகாக்கவும், வெடிவைத்தல், நஞ்சு வைத்தல் மற்றும் இதர அழிவிற்கான மீன்பிடி பழக்கங்களை அவசியம் எல்லா நாடுகளிலும் தடை செய்ய வேண்டும்.

நாடுகள் அவர்களது நீர்பரப்பில் மீன்பிடிக்க மீன்பிடி கலன்கள் மட்டுமே பயன்படுத்துவதை உறுதி செய்திடல் வேண்டும். அவ்வாறு நடத்தப்படும் மீன்பிடிப்பு ஒருநாட்டுக்கு பொருந்தக்கூடிய பொறுப்பான முறையில் வகுக்கப்பட்ட விதிகள், ஒழுங்குமுறைகள் அல்லது சட்டங்களுக்கு ஏற்ற முறையில் செயல்பட வேண்டும்.

அளவுக்கு அதிகமாக மீன்பிடிப்பினை தவிர்த்திட இயற்கையான மீன்வகைகளின் உற்பத்தியை காட்டிலும் மீன்பிடி கலன்களின் அளவு இருத்தல் வேண்டும், (அளவுக்கதிகமாக மீன்பிடித்தலால் எதிர்காலத்தில் மீன்வளம் குன்றிவிடும்), அத்துடன் மீன்பிடி கருவிகளால் சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் விளைவுகளை (உதாரணமாக பவளப்பாறைகளின் மீது ஏற்படும் தாக்கம்) புதிய மீன்பிடி கருவிகளை பயன்படுத்துவதற்கு முன்னர் அவசியம் புரிந்துக் கொள்ள வேண்டும். கழிவுறும் மீன்களை பிடிப்பதை குறைத்திடவும் மீன்பிடி சாதனங்களிலிருந்து தப்பிச் செல்லும் மீனின் உயிர்வாழ் வளர்ச்சி விகிதம் அதிகரிக்கவும் ஏற்றவாறு மீன்பிடிமுறை மற்றும் மீன்பிடி உபகரணங்களை தேர்வு செய்து வடிவமைக்கப்பட வேண்டும். தேவையற்ற மீன் இனங்களை பிடிப்பதை குறைப்பதற்கும் அல்லது அழிவுறும் நிலையில் உள்ள மீன்களை பிடிக்காமல் இருக்கவும் (இலக்கற்ற அல்லது வழிபோக்கில் பிடிக்கின்ற) இவை உகந்ததாக இருக்கும். அதிக அளவில் வீணாகின்ற மீன்பிடிப்புக்கு காரணமான, தகுந்த தேர்வு செய்யப்படாத மீன்பிடிசாதனங்கள் மற்றும் மீன்பிடிப்பு முறைகளை படிப்படியாக குறைக்க வேண்டும்.


வாங்கப்படும் மீன்பிடி கலன்கள் அதிக அளவில் கழிவுகளை வெளியேற்றாமல் இருத்தல் வேண்டும். மேலும் மீன்பிடி கலன்களின் உரிமையாளர்களும், பணியாட்களும் வெளியேற்றப்படும் கழிவுகளால் சுற்றுப்புறம் அதிக அளவு மாசுபடாமல் இருக்க கண்டிப்பாக உறுதி செய்யதல் வேண்டும்.

தூய காற்றை பாதுகாக்கவும், சில மீன்பிடி கலன்களில் உள்ள குளிர் சாதன அமைப்புகளிலிருந்து வெளியேறும் ஆபத்தினை விளைவிக்கும் புகை மற்றும் ஓசோன் மண்டல அழிவுக்கு காரணமாயிருக்கும் வெளிப்பாடுகளை குறைத்திடும் நோக்குடனும் நாடுகள் உரிய வழிமுறைகளை பின்பற்ற வேண்டும். இவ்வாறு மீன்பிடி கலன்களிலிருந்து வெிளியேற்றப்படுபவைகளை படிப்படியாக குறைக்க வேேண்டும்.

முக்கியமான மீன் உறைவிடங்களான ஈரமான பகுதிகள், சதுப்பு நிலப் பகுதிகள், பவளப்பாறைகள், உவர்நீர் ஏரிகளையும், அழிவு மற்றும் மாசுத் தன்மையிலிருந்து பாதுகாக்க வேண்டும். இயற்கை பேரழிவுகள் மீன்வள ஆதாரங்களை பாதிக்கும் போது, நாடுகள் தேவையானபோது அவசர பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளை கையாள வேண்டும்.

## கொடி நாடுகள்

மீன்பிடி கலன்களை இயக்கும் நாடுகளுக்கு, தங்களது நீர் பரப்புகளை தாண்டி மீன் பிடிக்கும்போது அக்கலன்களுக்கு பொருத்தமான சான்றிதழ் மற்றும் அவ்வாறு மீன்பிடிக்க அனுமதி பெற்றுள்ளதாவென்பதை உறுதி செய்து கொள்ளும் பொறுப்பு உள்ளது. நாடுகள், தங்களது நீர் பரப்புகளை தாண்டி மீன்பிடிக்கும் கலன்களின் விரிவான பதிவேடு–களை வைத்திருத்தல் அவசியம்.




கொடி நாடுகள் (மீன்பிடி கலன்களுக்கு என ஒருகொடி வழங்குகிற நாடுகள்) தங்களுடைய கலன்கள் பாதுகாப்பாக உள்ளதா என்பதனையும் காப்புறுதி செய்யப்பட்டுள்ளதா என்பதனையும் உறுதி செய்தல் வேண்டும். மேலும் கலன்களும் மற்றும் கருவிகளும் உரிய முறையில் தேசிய அல்லது சர்வதேச விதிமுறைகளின்படி அடையாளமிடப்படவேண்டும். விபத்துக்களுக்கு உள்ளான வெளி நாட்டவர் குறித்த தகவல்களை சம்பந்தப்பட்ட வெளிநாட்டு அரசாங்களுக்கு அளிக்க வேண்டும்.

## துறைமுக நாடுகள்

சில நெருக்கடியான நேரங்களில் துறைமுகத்தினுள் நுழையும் கலன்களை தவிர தங்களது துறைமுகத்தினுள் நுழையும் வெளிநாட்டு மீன்பிடி கலன்களை ஆய்வு செய்வதற்கு, நாடுகள் சில வழிமுறைகளை பின்பற்ற வேண்டும். அக்கலன்கள் தங்கள் துறைமுகத்தினுள் நுழையும் போது அவை மீன்பிடிக்கும் பொறுப்புள்ளது என்பதை உறுதி செய்து உதவ வேண்டும். துறைமுக நாடுகள், கலன் பதிவு செய்த நாட்டுடன் (கொடி நாடு) ஒத்துழைத்து,

கொடிநாடு உதவி கோரும் போது அதன்கலன்களால் நிகழும் மீறல்களை ஆய்வு செய்தல் வேண்டும்.

துறைமுகங்களும், கரையேறும் இடங்களும், மீன்பிடி கலன்களுக்கு பாதுகாப்பான புகலிடமாக இருக்க வேண்டும். இவ்விடங்களில் கலன்களை சரிபார்க்கவும், விற்பவர் மற்றும் மீனை வாங்குவோருக்கு உரிய வசதிகள் இருக்க வேண்டும். நன்னீர் விநியோகம், சுகாதார வசதிகள் மற்றும் கழிவு அகற்றும் வசதிகளும் செய்து தரப்பட வேண்டும்.



## நீர்வாழ் உயிரின அபிவிருத்தி


மனிதர் உட்கொள்ள மீன்கள் விநியோகம் அதிகரிக்கும்போது நீர்வாழ் உயிரின அபிவிருத்தியில் மரபு வழி மாறுபாட்டை பாதுகாத்தலும் மற்றும் பண்ணை மீன்களின் எதிரிடை விளைவுகள், இயற்கையான மீன்களின் எண்ணிக்கையின் பாதிப்பினை குறைப்பதையும் அடிப்படை நோக்கமாக கொள்ள வேண்டும்.

விரிகுடா அல்லது நிலப்பகுதிகள் போன்ற ஆதாரங்கள் அடிக்கடி ஒருவருக்கு மேற்பட்ட உபயோகிப்பாளரால் உபயோகிக்கப்படுகிறது. அல்லது மாறுபட்ட பயன்பாட்டிற்கு சாத்தியமாவதாக உள்ளது. ஆதாரங்களை பயன்படுத்தும் பலதரப்பட்ட உபயோகிப்பாளர்களிடையே எழும் சண்டை மற்றும் சச்சரவுகளை தவிர்க்கவும், ஆதாரங்களை உபயோகிக்கும்போது நியாயமான முறையில் ஒதுக்கீடு செய்வதை உறுதி செய்திட நாடுகள் தகுந்த கொள்கைகளும், திட்டங்களும் கொண்டிருக்க வேண்டும்.

வழிமுறை மற்றும் உற்பத்தி மீன்பிடி தளங்கள் ஆகியனவற்றை உள்ளடக்கிய உள்ளூர் மக்களின் பிழைப்பு நீர்வாழ் உயிரின அபிவிருத்தி காரணமாக எதிரிடையாக பாதிக்காதவாறு, நாடுகள் நடவடிக்கை மேற்கொண்டு, அதனை உறுதி செய்ய வேண்டும். கண்காணிப்பு முறைகள்

மற்றும் நீர் வாழ் உயிரின வளர்ப்பின் சுற்றுச்சூழல் பாதிப்பின் மதிப்பீடு முறைகள் நிலைநாட்டுதல் வேண்டும். இதனுடன் மீன்பண்ணைகளில் பயன்படும் உணவு வகைகள் மற்றும் உரங்களை கண்காணிப்பதில் கவனம் செலுத்தவேண்டும். நோய்களை கட்டுப்படுத்தும் மருந்துகளும் மற்றும் இரசாயனங்களின் உபயோகமும் குறைவாக இருத்தல் வேண்டும். காரணம், இவைகள் முக்கியமான எதிரிடை விளைவுகளை சுற்றுக்சூழலுக்கு ஏற்படுத்தும். மேலும் நீர்வாழ் உயிரின உற்பத்திப் பொருட்களுக்கு பாதுகாப்பும் மற்றும் தரமும் இருக்குமாறு உறுதிசெய்வது முக்கியமாகும்.

மீன்பண்ணை விளைவுகள் ஒருநாட்டில் நீர்நிலைகளுக்கு அப்பால் நீட்டிக்கும்போது, மீன்பண்ணைக்கு தன் நாட்டினை சாராத மீன் இனங்களை அறிமுகம் செய்வதற்கு முன், நாடுகள், அண்டை நாட்டினரின் யோசனையை அவசியம் கோரவேண்டும். புதிய இனங்களின் நோய்களை குறைக்கும் பொருட்டு, நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் தாவரங்களை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அறிமுகம் செய்யும் போது நாடுகள் தேவையான, இருதரப்பிலும் ஒப்புக் கொள்ளக்கூடிய விதிகளை, வழக்கங்கள் அல்லது ஒழுக்கத்தை நிலைநாட்ட வேண்டும். நீர்வாழ் உயிரின வளர்ப்பு திட்டங்களை உருவாக்கும்போது, நாடுகள் மற்றும் தொழில் துறைகள் அழிந்து வரும் இனங்களை நிலைநிறுத்தவும் மற்றும் விநியோகம் அதிகரிக்கப்படவும் தொழில் நுட்பத்தை மேம்படுத்த வேண்டும். (சரி செய்ய வேண்டிய நடவடிக்கை எடுக்காவிடில், அவ்வகை இனங்கள் அழிவுற நேரலாம்).




## ஒருங்கிணைந்த மீன்வளம் – கடற்கரை பகுதி மேலாண்மை

எவ்வாறு கடற்கரை ஆதாரங்களை (உதாரணமாக நீர், நிலம் முதலியன) பயன்படத்துவது அல்லது மதிப்பீடு செய்வது என்பதை முடிவு செய்யும்போது அப்பகுதியில் வாழும் மக்கள், மீன்பிடிப்போர் உட்பட,

அம்மக்களின் வாழ்க்கை முறைகளை முக்கியமாக கவனித்து அவர்களின் கருத்துக்களை கணக்கில் கொண்டு திட்டமிடப்படல் வேண்டும்.

கடற்கரை மண்டலத்தில் பல்வேறு பயன்பாடுகளில், மீன்பிடிப்பு முறைகளை செய்யும்போது, மீன்பிடிப்போர் மற்றும் இதர உபயோகிப்–பாளரிடையே சண்டைகள் வருவதைத் தவிர்க்க வேண்டும். அல்லது சச்சரவுகள் ஏற்படும்போது, நியாயமான முறையில் அவைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும். கூடவே, கடலோர ஆதாரங்களை பாதுகாக்கவும், திறம்பட மேலாண்மை செய்யவும், நாடுகள் தங்களது அண்டையிலுள்ள கடற்கரை பகுதியினருடன் ஒருவருக்கொருவர் ஒத்துழைக்க வேண்டும்.

## மீன்பிடிப்புக்குப்பின் நடைமுறைகள் மற்றும் வியாபார பொறுப்புகள்



நாடுகள் தங்கள் மக்களிடம், மீன் மற்றும் மீன் பொருட்கள் பாதுகாப்பானது மற்றும் ஆரோக்கியத்திற்கு உகந்தது என்பதை உறுதிபடுத்தி, மக்களை மீனை உண்ண ஊக்கப்படுத்தவேண்டும். நுகர் –வோரின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும், வியாபாரத்தில் தில்லு முல்லு செய்யாமலும் (உதாரணமாக மீன் விற்பனையில் தவறான தகவல்களை நுகர்–வோருக்கு அளித்தல்) இருந்திட தரமான மீன்கள் நுகர்வோருக்கு கிடைத்திட அரசு வழிவகை செய்ய வேண்டும். மேலும் பொதுவான சுகாதார நடவடிக்கைகள் மற்றும் சான்றளிப்பு செயல்முறை திட்டங்கள் இயற்றிட நாடுகள் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

பதப்படுத்துதல், போக்குவரத்து மற்றும் மீன் இருப்புசெய்தல் ஆகிய வழிமுறைகள் சுற்றுச் சூழுலுக்கு உகந்த முறையில் இருக்க வேண்டும். (சுற்றுச் சூழலுக்கு, இம்முறைகள் தாக்கம் ஏற்படாதவாறு இருக்க வேண்டும்) மீன்பிடித்த பின்னர் இழப்பு, வீணாதல் குறைவாக இருக்க வேண்டும். (தேவையில்லாத மீன் இனங்களை பிடிப்பதை தவிர்க்கலாம்) பிடித்த மீன்களை அதிக அளவில் பயன்படுத்த வேண்டும். குறிப்பாக மீன்பதப்படுத்தலில் நீர், சக்தி, மரம், மீன் போன்றவற்றில் மிகவும் ஜாக்கிரதையாக மேலாண்மை செய்யவேண்டும். அதிக மதிப்புள்ள மீன் பொருட்கள் அல்லது

பதப்படுத்தப்பட்ட மீன் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு ஊக்கப்படுத்த வேண்டும். ஏனென்றால், அது வழக்கமாக மீன் பிடிப்போருக்கு அதிகப்–படியான வருவாயை ஈட்டித் தருகிறது.

மீன் மற்றும் மீன் பொருட்களை ஆளுகை செய்யும் வணிகச் சட்டங்கள், எளிமையாகவும் தெளிவாகவும், பன்னாட்டு விதிகளுக்கு முரணற்றதாகவும் இருத்தல் அவசியம். குறிப்பிட்ட காலவரைகளில் நாடுகள் தங்களுடைய வணிக சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளையும் உருவாக்குதல் மற்றும் ஆய்வு செய்யும் போது மீன்பிடிப்போர், சுற்றுச் சூழல் நிறுவனங்கள் மற்றும் நுகர்வோரின் யோசனைகளை கேட்க வேண்டும். ஒருநாட்டின் சட்டத்திட்டங்களில் மேம்பாடு அல்லது மாற்றங்கள் செய்யும்போது மற்ற நாடுகளுக்கு தெரிவித்தலும், அவர்களது ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விதிமுறைகளில் உரியமாற்றங்கள் செய்து அதை நடைமுறைப்படுத்திட கால அவகாசம் அளித்தலும் வேண்டும்.

பன்னாட்டு வணிகம் குறைந்து வரும் கையிருப்பு மீனினத்தை (ஏற்கெனவே அதிக அளவில் பிடிக்கப்பட்டு விட்ட மீனினிம்) அருவடை செய்வதில் தலையிடுவதில்லை என்பது முக்கியமானதாகும். எனினும் நாடுகள் இடர் உண்டாகும் மீனன வர்தகத்தை ஒழுங்குபடுத்தும் பன்னாட்டு ஒப்பந்தங்களை ஏற்று ஒத்துழைப்பு நல்குகின்றன. மேலும், மீன் வளத்தை பாதுகாப்பதையும் அவ்வளம் தொடர்ந்து பயனுறுவதையும் மீன் மற்றும் மீன்பொருள் வர்த்தகம் வலிவற்றதாகிவிடக் கூடாது.

## மீன்வள ஆராய்ச்சி

பொறுப்பார்ந்த மீன்வள நடத்தையினை அமுல்படுத்திட திறமையான அறிவியல் அடிப்படைகளை நாடுகள் அறிந்திருத்தல் அவசியம். ஆகையால், நாடுகள்அறிவியல் ஆய்வு வசதிகளை ஏற்படுத்தலும் இளம் தொழில்நுட்ப வல்லுநர்களை பயிற்சி அளித்து ஊக்கபடுத்தலும் அவசியமாகும். வளர்ச்சி பெறா நாடுகள் மற்றும் சிறிய தீவு நாடுகள் ஆகியவற்றிற்கு தேவையான அறிவியல் ஆய்வில் சிறப்பு கவனம் செலுத்திட பன்னாட்டு தொழில்நுட்ப ஆராய்ச்சி மையங்கள் அனைத்து உதவிகளையும் நல்க வேண்டும்.


ஆராய்ச்சி நடத்திட மீன்வளம் மற்றும் அதன் சுற்றுப்புற சூழ்நிலைகளில் ஏதேனும் மாற்றம் நிகழ்கின்றனவா என்பதனை நாடுகள் கண்காணித்து வரவேண்டும். இலக்கு மீன்பிடிப்பில் பயனுறும் பல்வேறு மீன்பிடிப்பு கருவிகளின் தாக்கங்கள் மற்றும் பொதுவான சுற்றுச் சூழல் பற்றிய புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படல் வேண்டும். வணிக ரீதியான புதிய மீன்பிடி

கலன்கள், மீன்பிடி தொழில் நுட்பங்கள் அறிமுகம் செய்ய நாடு திட்டமிடும் போது இது மாதிரியான ஆய்வு மிகவும் பயன்படும். சமூக மற்றும் விற்பனை நோக்கங்களுக்கும் இவ்வாய்வு உதவிடும்.

பன்னாட்டு ஆராய்ச்சி முயற்சிகளில் நாடுகள் ஒன்றுபட்டு ஒத்துழைத்தல் அவசியம். பிறநாட்டு நீர்பரப்பில் ஆய்வு நடத்திடும்போது உள்ளூர் நடைமுறையில் இருக்கும் மீன்பிடிப்பு கட்டுப்பாடுகளை கவனத்தில் கொண்டு ஆராய்ச்சியாளர்கள் செயல்படவேண்டும். மீன்பிடித்தல் அதுசார்ந்த அறிவியல் செய்திகளை பிராந்திய மீன்துறை நிறுவனங்களுக்கு அளிப்பதோடு ஆர்வமுடைய இதர நாடுகளுக்கும் இதனை உடனுக்குடன் தெரிவித்தல் வேண்டும்.

## மண்டல மற்றும் பன்னாட்டு ஒத்துழைப்பு

மீன்வளம் குறித்த பல விடயங்களில் நாடுகளும் மற்றும் மண்டல மீன்துறை நிர்வாக அமைப்புகளும் ஒத்துழைக்க வேண்டுமென்பது மிகவும் தெளிவாகிறது. மீன்பிடிப்பு சம்பந்தமான மேலாண்மை நடவடிக்கைகளை ஒரு நாட்டில் அமுல்படுத்தும்போது அது பிற நாடுகளில் செயல்படும் நடவடிக்கை – களுக்கு, குறிப்பாக ஒரே இன மீன்பிடிப்பு நடத்தும்போது பொருந்துவதாக இருக்க வேண்டும். மேலும், மண்டல அமைப்புகளிடையே நிலவும் ஒத்துழைப்பு பிற நாடுகளில் எற்படும் மீன்பிடிப்பு தகராறுகளை குறைப்பதில் முக்கிய பங்கு வகிக்கும். ஆயினும், மீன்பிடிப்பு தகராறுகள் ஏற்படும் பட்சத்தில் அமைதியான முறையில் மிக விரைவில் தீர்வு காண முயற்சி மேற்கொள்ளல் வேண்டும்.



மீன்வள பாதுகாப்பு, மேலாண்மை ஆய்வு நடவடிக்கைகள் குறித்த செலவினத்தை உறுப்பினர் நாடுகளிடம் மண்டல மீன்வள அமைப்புகள் கேட்டுப் பெறவேண்டும். கூடுதலாக உள்ளூர் மீனவ சமுதாய அமைப்புகளின்

பிரதிநிதிகளை மண்டல மீன்வள அமைப்புகளின் செயல்பாடுகளில் பங்கேற்க அனுமதித்தல் வேண்டும்.


## இவை எல்லாவற்றின் நோக்கம் என்ன ?

நாடுகள், விவேகமுடைய கொள்கைகளை வைத்து, பொறுப்பார்ந்த மீன்பிடிப்பு மற்றும் பயன்பாட்டு முறைகளை பின்பற்றினால் இயற்கையாக புதுப்பிக்கப்படுகிற ஆதாரமாக, மீன் வருடந்தோறும் பெற முடியும். இதுபோலவே, சுற்றுச்சுழலுக்கு கேடு விளைவிக்காத வகையில் நீர் உயிரின வளர்ப்பு மற்றும் பண்ணை மீன் உற்பத்தி மூலம் மீன்வளத்தினை பெருக்கிட வேண்டும். ஏனென்றால் இது மாதிரியான மீன்வளர்ப்பு, முக்கியமாக சமூக பொருளாதாரத்தினை மேம்படுத்துவதோடு அவர்தம் நாட்டின் பொருளாதாரத்தையும் மேம்படுத்திட முடியும்.

மீன்பிடிப்பு மற்றும் நீரின மீன்வளர்ப்பில் ஈடுபடுவோர் அனைவரும் பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித் தொகுப்பை வெற்றிகரமாக செயல்படுத்தினாலே மீன்உணவு மற்றும் மீன் பொருட்கள் தற்போதைய ஜனத்தொகைக்கு போதுமானதாவும், இனிவரும் எதிர்கால சந்ததியினருக்கு போதுமானதாகவும் இருக்கும். உண்மையில், இப்போதைய தலைமுறையினர் கவனமின்றி அளவுக்கு அதிகமாக மீன்பிடிப்பு செய்து எதிர்கால தலைமுறையினருக்கு கிடைக்க வேண்டிய மீன்வளத்தை குறைத்திடாமல் இருப்பதற்கு தலையாய பொறுப்பு உள்ளது.

நாடும் அதன் மக்களும் விரிவான ஒருங்கிணைந்த மீன்வள கொள்கைகளை மின்துறையில் அமுலாக்கிட இந்த பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதி தொகுப்பு வலியுறுத்துகிறது. அப்படிச் செய்வதன் மூலம் நன்கு வளர்ச்சி பெற்ற வலுவுள்ள துறை நிலை பெறும். இதுபோன்ற பொறுப்பார்ந்த நடவடிக்கைகள் காலப்போக்கில் மீன்வளத்தினை பெருக்கும் நிலைமை, மிகுந்த நம்பிக்கையுள்ள உணவளித்தலில் பங்கு கொள்ளும் நிலை மற்றும் நீடித்த வருமானம் கிடைத்திடவும் உறுதுணையாக இருக்கும்.

உலக நாடுகள் அனைத்தும் பொறுப்பார்ந்த மீன்வளத்தினை பாதுகாத்திட ஒன்று படுமானால் அதிகப்படியான மீன் உணவை வரவிருக்கும் அநேக தலைமுறைகளுக்கு கொடுக்கவியலும். இந்நூல் மிகுந்த செய்திகளை அளித்துள்ளது என்பதை நீங்கள் உணர்ந்துள்ளீர்கள் என்றும் மேலும் உலக மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரினங்களை பொறுப்பான வழியில் மேம்படுத்தி மற்றும் மேலாண்மை செய்வதை உறுதியளித்திடும் வகையில் உங்கள் பங்கினை அளிப்பீர்கள் என்று ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் மீன்துறை பிரிவு நம்பிக்கை கொண்டுள்ளது.



இக்கையேடு தொழில் நுட்ப ரீதியில் இல்லாமல் பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதிகளின் முக்கியத்துவத்தை விவரிக்கின்றது. விதிகளின் நோக்கத்தையும், இலக்கினை எய்துவதற்கு பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தி எல்லாவிதமான மீன்பிடிப்பு மற்றும் மீன்வளர்ப்பிலும் திறனுடன் செயல்படுத்த ஊக்குவிப்பது இதன் நோக்கமாகும்.

இந்தக் கையேடு நடத்தை விதிகளுக்கு பதிலானதல்ல. ஆனால் விதிகளில் உள்ள சில சிக்கலான தகவல்களை எளிமைப்படுத்தி மீன்வளத்தைப் பயனப்படுத்தும் அனைவரும் எளிதானவகையில் புரிந்து செயல்படுவதற்கான முயற்சியேயாகும்.

Translation and Printing of this booklet has been arranged by the Bay of Bengal Programme, 91, Saint Mary's Road, Abhiramapuram, Chennai-600 018, India (Tel: # 91 44 4936188; Fax: # 91 44 4936102)